Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 17/2025**

Preliminary Register

Deposition of **PW- 1 LW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கோமதி | Husband Name | : | ரெகுபதி |
| Village | : | அவிச்சாகுடி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | வீட்டுக்குடித்தனம் |
| Religion | : | | Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 01st day of November 2025.

எதிரிகள் ஆஜர் . எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>முதல் விசாரணை-</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். நான் இந்த வழக்கின் புகாரினை முகிலன், கபிலன் மற்றும் அமுதன் மீது கொடுத்துள்ளேன். ஆஜர் எதிரிகளில் முகிலன் மற்றும் கபிலன் ஆஜராகியுள்ளார் (சாட்சி அடையாளம் காட்டுகிறார்). 1 வது மாதம் 5வது தேதி 2025வது வருடம் இரவு 08.00 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தேன். என் இரண்டு பெண் பிள்ளைகள் ப்ரீத்தா மற்றும் ப்ரீத்தியும் மற்றும் 60 வயதுடைய என்னுடைய தாயார் சந்திராவும் வீட்டில் இருந்தோம். ஆஜர் எதிரிகளும் அமுதனும் அந்த நேரத்தில் என் வீட்டு வாசலில் நின்று குடிபோதையில் எங்களை இழுத்து என் தாயார் சந்திராவை

கபிலாவின் அப்பா முருகானந்தம் 15 நாட்களுக்கு முன்பு அடித்ததற்கு நாங்கள் வழக்கு கொடுத்ததற்காக என் வீட்டு வாசலில் நின்று எதிரிகளும் அமுதனும் தகாத வார்த்தகளால் திட்டினர் சாட்சி அந்த வார்த்தை சொல்ல தயங்குகிறார். அந்த வார்த்தையை நீதிமன்றத்தில் உங்களால் சொல்லமுடியுமால் என்றால் முடியாது. நான் ஏன் தேவையில்லாமல் பிரச்சனை செய்கிறீர்கள் என்று அவர்களை பார்த்து கேட்டேன். அப்போது எனது சேலையை பிடித்து இழுத்தார். யார் எனது சேலையை பிடித்து இழுத்தார் என்றால் முகிலன்தான் எனது சேலையின் மேல் தலைப்பு பகுதியை பிடித்து இழுத்தார். மேலும் கபிலனும் அமுதனும் எனது அப்பா மீது எப்படி கேஸ் கொடுத்தீர்கள் என்று திட்டினார்கள். உங்க அப்பா அடித்ததனால் தான் நாங்கள் கேஸ் கொடுத்தோம் என்று சொன்னதும் என்னை ஊரை விட்டு விரட்டுவதாக அமுதனும் கபிலனும் பேசினார்கள். என்னை சேலையை பிடித்து இழுத்ததில் எனக்கு காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. நடந்த சம்பவத்தை பிரீத்தா, பிரீத்தி, அனுசியா, ராஜா, சந்திரா ஆகியோரும் பார்த்தார்கள். ராஜா இதுகுறித்து எதிரிகளை கேட்டபோது பெண்கள் இருக்கும் இடத்தில் ஏன் பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரிகள் அவர்களிடமும் அவளுக்கு நீ என்ன சப்போட்டா என்று சண்டைக்கு போனார்கள். இதுகுறித்து நான் போலீசில் புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (புகார் மனு **அ.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது). போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

கடந்த 05.01.2025 அன்று இரவு 08.00 மணிக்கு எதிரிகளின் தாயார் சரஸ்வதி கோவிலுக்காக எனது வீட்டு வழியாக போனார்கள் அப்போது நான் எனது சகோதரர் ராஜா மற்றும் அவரது மனைவி அனுசியா ஆகிய மூவரும் முன்விரோதம் காரணமாக அவர்களை வழிமறித்து கெட்ட வார்த்தைகளால் திட்டியதால் அதனை அவரது மகன்களான இவ்வழக்கின் எதிரிகள் வந்த கேட்டபோது ராஜா கம்பியால் அமுதனை தாக்கி வலது கையில் அவருக்கு காயத்தை ஏற்படுத்தியதாகவும் அனுசியா

செருப்பால் சரஸ்வதியை அடித்து அவர்களுக்கு கொலைமிரட்டல் விடுத்ததாக சரஸ்வதியால் புகார் கொடுக்கப்பட்டு எங்கள் மூவரின் பேரிலும் குற்ற எண் 10/2025 என வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் தான் என்னுடையது என்றால் சரிதான். அந்த புகாரை நான் எழுதவில்லை, அதில் என்ன எழுதியுள்ளது என்றால் தெரியாது, எனக்கு படிக்க தெரியாது. புகாரை நான் என்று எத்தனை மணிக்கு கொடுத்தேன் என நாள் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். எதிரி இளஞ்சிறாரை ராஜா கம்பியால் தாக்கயதில் அவருக்கு வலது கையில் காயம் ஏற்பட்டு ஆவூர் அரசு மருத்துவமனையில் அவர் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் இல்லை அதுபோல் எதுவும் நடக்கவில்லை. இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகளான 2 முதல் 6 வரையிலான சாட்சிகள் எனது குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சாட்சி 7 விஜயகுமார் எனது கொழுந்தனார் ஆவார். இவ்வழக்கின் புகாரை காலதாமதமாக கொடுத்ததற்கு சிறப்பு காரணம் ஏதும் உண்டா என்றால் நாங்கள் பெண்களாக இருந்ததாலும் எனது கணவர் வெளியூரில் இருந்ததாலும் அவர் வந்தபிறகு எங்களை புகார் கொடுக்க அழைத்து சென்றார். நான் சம்பவம் நடந்ததாக கூறுவது எவ்வளவு நேரமாக நடந்திருக்கும் என்றால் சுமார் 1 மணி நேரம் நடந்திருக்கும். எங்கள் வீட்டின் அருகில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் அனைவரும் பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள, "என் இரண்டு பெண் பிள்ளைகள் ப்ரீத்தா மற்றும் ப்ரீத்தியும் மற்றும் 60 வயதுடைய என்னுடைய தாயார் சந்திராவும் வீட்டில் இருந்தோம்", என்று எனது புகாரிலோ போலீசார் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள, " ஆஜர் எதிரிகளும் அமுதனும் அந்த நேரத்தில் என் வீட்டு வாசலில் நின்று குடிபோதையில் எங்களை இழுத்து என் தாயார் சந்திராவை கபிலாவின் அப்பா முருகானந்தம் 15 நாட்களுக்கு முன்பு அடித்ததற்கு நாங்கள் வழக்கு கொடுத்ததற்காக என் வீட்டு வாசலில் நின்று எதிரிகளும் அமுதனும் தகாத வார்த்தகளால் திட்டினர்", என்று புகாரிலோ போலீசார்

விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள, " நான் ஏன் தேவையில்லாமல் பிரச்சனை செய்கிறீர்கள் என்று அவர்களை பார்த்து கேட்டேன். அப்போது எனது சேலையை பிடித்து இழுத்தார். யார் எனது சேலையை பிடித்து இழுத்தார் என்றால் முகிலன்தான் எனது சேலையின் மேல் தலைப்பு பகுதியை பிடித்து இழுத்தார். மேலும் கபிலனும் அமுதனும் எனது அப்பா மீது எப்படி கேஸ் கொடுத்தீர்கள் என்று திட்டினார்கள்", என்று புகாரிலோ போலீசார் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் இடையே இருந்த முன்விரோதம் காரணமாக நானும் சாட்சி 2 ராஜா, சாட்சி 3 அனுசியா ஆகியோர் எதிரிகளின் தாயார் சரஸ்வதியை கெட்ட வார்த்தையால் திட்டினோம் என்றாலும் அதனை கேட்க வந்த எதிரிகளை கம்பியாலும் செருப்பாலும் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தோம் என்றாலும் அவ்வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக பொய்புகாரை கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2025.11.01 19:28:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar
Miscellaneous **Case No. CC. 17/2025**
Preliminary Register

Deposition of **PW- 2 LW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜா | Father Name | : | நாகமுத்து |
| Village | : | அவிச்சாகுடி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 01st day of November 2025.

எதிரிகள் ஆஜர் . எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது சித்தப்பா மகள் அக்கா முறை ஆவார். 05.01.2025 அன்று இரவு 08.00 மணியளவில் என் அக்கா கோமதி வீட்டின் வாசலில் சம்பவம் நடைபெற்றது நான் எதிர் வீட்டில் குடியிருந்தேன். தினமும் எதிரிகளும் அமுதனும் குடிபோதையில் அக்கா வீட்டு வாசலில் இருந்து முன்விரோதத்ததை மனதில் வைத்துக்கொண்டு வெட்டிவிடுவேன் குத்திவிடுவேன் என்றும் கெட்ட வார்த்தைகளாலும் அவர்களை திட்டினார்கள். பொங்களுக்குள் உங்களை தீர்த்துவிடுவேன் என்றும் கூறினார்கள். சம்பவ தினத்தன்று நான் என் வீட்டில் தான் இருந்தேன். சத்தம் கேட்டது வெளியில் வந்து நான் பார்த்தேன். அப்போது ஆஜர் எதிரிகளும் அமுதனும் அங்கு நின்று கெட்ட

வார்த்தைகளால் பேசினார்கள் அந்த வார்த்தை என்னவென்றால் " புண்டா மகனே, தேவுடியா மகனே" என்று பேசி என்னைக்காக இருந்தாலும் உங்களை எல்லாம் கொலை பண்ணிடுவேன் என்று மிரட்டினார்.

என் அக்கா மகளை பார்த்து இவர்கள் தகாத வார்த்தைகளால் பேசியதால் எனக்கே அசிங்கமாக இருந்தது. நான் ஏன்பா இப்படி சத்தம் போடுகிறீர்கள் என்றும் தினமும் இப்படி பண்ணுகிறீர்கள் என்றும் அவர்களை பார்த்து கேட்டேன். கபிலன் முகிலன், அமுதன் மூவரும் என் அப்பாவை மாட்டி விட்டீல உன்னைதான்டா தேடிகிட்டிருக்கேன் என்று சொன்னார்கள் நான் பேசிக்கொண்டிருக்கும் போதே முகிலன் என் மனைவியை மார்புப் பகுதியில் கையை வைத்து தள்ளினார். எனக்கு ஒன்றும் செய்யமுடியாத நிலையில் இருந்தேன். முன்விரோதம் காரணமும் எங்களுக்குள் இருந்தது. இந்த சம்பவத்தின் 15 தினங்களுக்கு முன்பே முன்விரோதம் இருந்தது. கோமதியை கெட்ட வார்த்தை சொல்லி பேசிய பிறகு என்ன நடந்தது என்றால் என் அக்கா கோமதியை வெளியில் வந்து ஏன் இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு கபிலன் என் அக்காவின் சேலையை பிடித்து இழுத்தார். இந்த சம்பவத்தை என் குடும்பத்தார் அனைவரும் பார்த்தார்கள். யார் யார் என்றால் என் சின்னம்மா சந்திரா, அக்கா மகள்கள் ஆகியோரும் பார்த்தார்கள். இது குறித்து என் அக்கா, எனது மனைவி நாங்கள் அனைவரும் புகார் கொடுத்தோம். போலீசார் எங்களை விசாரித்தார்கள். எதிரிகளும் எங்கள் மீது வழக்கு கொடுத்துள்ளார்கள். இன்று நீதிமன்றத்திற்கு சாட்சி கூற வந்திருந்த நிலையில் கபிலன் என்னை கையை அசைத்து நாக்கை துறுத்தி மிரட்டினார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

எதிரிகள் எங்கள் மீது கொடுத்துள்ள வழக்கில் நாங்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி வருகிறோம் என்றால் சரிதான். யார் யார் ஆஜிராகி வருகிறோம் என்றால் நானும், கோமதி மற்றும் அனுசியா ஆஜராகி வருகிறோம். அவ்வழக்கில் எதிரிகளின் தாயார் சரஸ்வதியை திட்டியதாகவும் அமுதனை கம்பியால் அடித்ததாகவும் என் மனைவி செருப்பை எடுத்து வந்து இவ்வழக்கின் எதிரிகளை தாக்கியதாகவும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அவ்வாறு சம்பவம்

நடைபெறவில்லை. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை என்று விசாரணை செய்தார்கள் என்றால் 06.01.2025 அன்று போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள, “தினமும் எதிரிகளும் அமுதனும் குடிபோதையில் அக்கா வீட்டு வாசலில் இருந்து முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு வெட்டிவிடுவேன் குத்திவிடுவேன் என்றும் கெட்ட வார்த்தைகளாலும் அவர்களை திட்டினார்கள். பொங்களுக்குள் உங்களை தீர்த்துவிடுவேன் என்றும் கூறினார்கள். சம்பவ தினத்தன்று நான் என் வீட்டில் தான் இருந்தேன். சத்தம் கேட்டது வெளியில் வந்து நான் பார்த்தேன். அப்போது ஆஜர் எதிரிகளும் அமுதனும் அங்கு நின்று கெட்ட வார்த்தைகளால் பேசினார்கள் அந்த வார்த்தை என்னவென்றால் " புண்டா மகனே, தேவுடியா மகனே" என்று பேசி என்னைக்காக இருந்தாலும் உங்களை எல்லாம் கொலை பண்ணிடுவேன் என்று மிரட்டினார்", என்று போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள, “என் அக்கா மகளை பார்த்து இவர்கள் தகாத வார்த்தைகளால் பேசியதால் எனக்கே அசிங்கமாக இருந்தது. நான் ஏன்பா இப்படி சத்தம் போடுகிறீர்கள் என்றும் தினமும் இப்படி பண்ணுகிறீர்கள் என்றும் அவர்களை பார்த்து கேட்டேன். கபிலன் முகிலன், அமுதன் மூவரும் என் அப்பாவை மாட்டி விட்டீல உன்னைதான்டா தேடிகிட்டிருக்கேன் என்று சொன்னார்கள் " என்று போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள, “கோமதியை கெட்ட வார்த்தை சொல்லி பேசிய பிறகு என்ன நடந்தது என்றால் என் அக்கா கோமதியை வெளியில் வந்து ஏன் இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு கபிலன் என் அக்காவின் சேலையை பிடித்து இழுத்தார். இந்த சம்பவத்தை என் குடும்பத்தார் அனைவரும் பார்த்தார்கள். யார் யார் என்றால் என் சின்னம்மா சந்திரா, அக்கா மகள்கள் ஆகியோரும் பார்த்தார்கள்” என்று போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது நான் இவ்வழக்கின் இளஞ்சிறாரான அமுதனை கம்பியால் வலது கையில் தாக்கி அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான், எனது மனைவி அனுசியா, எனது அக்கா கோமதி ஆகிய மூவரும் எதிரிகளின் தாயார் சரஸ்வதியை தகாத

வார்த்தைகளால் திட்டினோம் என்றாலும் ஆஜர் எதிரிகளை தாக்கினோம் என்றாலும் இளஞ்சிறாரான அமுதனை கம்பியால் தாக்கினோம் என்றாலும் அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக தகுந்த சட்ட ஆலோசனை பெற்று பொய்புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தில் உண்மையில் பாதிக்கப்பட்டது எதிரிகள் தரப்பினர்தான் என்றால் சரியல்ல. எதிரிகள் மூவரும் சகோதரர்கள் என்றாலும் எதிரிகள் மூவரும் படித்துக் கொண்டிருக்கின்றனர் என்றாலும் சரியல்ல கபிலன் மட்டும் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறார் மற்ற இருவரும் வேலைக்கு செல்கின்றனர். நான் சொன்னது போல் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகள் யாரும் எங்களது தரப்பினரை கெட்ட வார்த்தைகளால் திட்டவோ, தாக்கவோ, அசிங்கப்படுத்தவோ, மிரட்டவோ இல்லை என்றால் சரியல்ல. என்னை 1 வது எதிரி இன்று நீதிமன்றத்துக்கு வெளியில் கையை ஆட்டி நாக்கை துறுத்தியதாக வேண்டுமென்றே இவ்வழக்கில் ஒரு அனுதாபத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக மிகைப்படுத்தி கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.11.01 19:28:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 17/2025**

Preliminary Register

Deposition of **PW-3 LW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அனுசியா | Husband Name | : | ராஜா |
| Village | : | அவிச்சாகுடி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | வீட்டுக் குடித்தனம் |
| Religion | : | | Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 01st day of November 2025.

எதிரிகள் ஆஜர் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.2 எனது கணவர் ஆவார். அசா.1 கோமதி எனது நாத்தனார் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கபிலன், முகிலன், அமுதன் மீது நாங்கள் இவ்வழக்கினை கொடுத்துள்ளோம். 05.01.2025 அன்று இரவு 08.00 மணிக்கு நான் குழந்தை பிறந்த சமயத்தில் எனது வீட்டில் இருந்தேன். என் வீடு என்பது என் நாத்தனார் வீட்டையும் சேர்த்துதான் கூறுகிறேன். எனது வீடும் எனது நாத்தனார் வீடும் எதிர்எதிர் வீடுதான். நாத்தனார் வீட்டு வாசலில் சத்தம் கேட்டது. ஆஜர் எதிரிகளும் அமுதனும் என் நாத்தனார் வீட்டை பார்த்து கெட்ட வார்த்தையால் பேசிக்

கொண்டிருந்தனர். அந்த வார்த்தைகளை சொல்ல முடியுமா என்றால் (சாட்சி அந்த வார்த்தைகளை சொல்ல தயங்குகிறார்). கோமதி அண்ணிக்கு 2 பெண் பிள்ளைகள் வயதுக்கு வந்த பிள்ளைகள் இருக்கிறார்கள் இந்த நிலையில இப்படி பேசுகிறீர்களே என்று கேட்டபோது கபிலன் கோமதி அண்ணியை சேலையின் தலைப்பு பகுதியை பிடித்து இழுத்து தள்ளினார். உடனே எனது கணவர் ஏன்டா வீட்டுல ஆம்பல இல்லை பொம்பளங்க மட்டும்தான் இருக்காங்க என்று கேட்டார் மேலும் எதிரிகள் சத்தம் போட்டார்கள் நானும் இதுகுறித்து கேட்டேன். அதற்குள் முகிலனும் கபிலனும் என் கணவரை பார்த்து பொங்கலுக்குள் உனது காலையோ கையையோ எடுத்து விடுவேன் என்று மிரட்டினார்கள். நான் என் கணவர் மட்டும்தானே இருக்கிறார் வேறு ஆண்கள் யாரும் இல்லையே என்று கேட்டேன் அதற்கு முகிலன் எனது இடது தோள்பட்டை கை வைத்து தள்ளினார் அந்த நேரத்தில் எனது இரண்டு மாத குழந்தையை அந்த பக்கத்தில் தான் வைத்திருந்தேன் அதனுடன்தான் போராடினேன். அக்கம்பக்கத்தாரான கோமதி, ப்ரீத்தி, சந்திரா ஆகியோரும் பார்த்தார்கள். எனது நாத்தனார் வீட்டில் ஆண்கள் இல்லாத சமயத்தில் எனது கணவர் மட்டும் இருந்த நேரத்தில் எதிரிகள் இதுபோன்று நடந்த கொண்டார்கள் இன்று வரை அப்படிதான் நடந்து வருகிறார்கள் என்று கூறுகிறார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

எதிரிகள் எங்கள் மீது கொடுத்துள்ள வழக்கில் நாங்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி வருகிறோம் என்றால் சரிதான். யார் யார் ஆஜிராகி வருகிறோம் என்றால் நானும், கோமதி மற்றும் ராஜா ஆஜராகி வருகிறோம். அவ்வழக்கில் எதிரிகளின் தாயார் சரஸ்வதியை திட்டியதாகவும் அமுதனை கம்பியால் அடித்ததாகவும் நான் செருப்பை எடுத்து வந்து இவ்வழக்கின் எதிரிகளை தாக்கியதாகவும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள, “கோமதி அண்ணிக்கு 2 பெண் பிள்ளைகள் வயதுக்கு வந்த பிள்ளைகள் இருக்கிறார்கள் இந்த நிலையில இப்படி பேசுகிறீர்களே என்று கேட்டபோது கபிலன்

கோமதி அண்ணியை சேலையின் தலைப்பு பகுதியை பிடித்து இழுத்து தள்ளினார். உடனே எனது கணவர் ஏன்டா வீட்டுல ஆம்பல இல்லை பொம்பளங்க மட்டும்தான் இருக்காங்க என்று கேட்டார் மேலும் எதிரிகள் சத்தம் போட்டார்கள் நானும் இதுகுறித்து கேட்டேன். அதற்குள் முகிலனும் கபிலனும் என் கணவரை பார்த்து பொங்களுக்குள் உனது காலையோ கையையோ எடுத்து விடுவேன் என்று மிரட்டினார்கள். நான் என் கணவர் மட்டும்தானே இருக்கிறார் வேறு ஆண்கள் யாரும் இல்லையே என்று கேட்டேன் அதற்கு முகிலன் எனது இடது தோள்பட்டை கை வைத்து தள்ளினார் அந்த நேரத்தில் எனது இரண்டு மாத குழந்தையை அந்த பக்கத்தில் தான் வைத்திருந்தேன் அதனுடன்தான் போராடினேன்" என்று போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான் பதற்றத்தில் நான் சொல்லவில்லை. நான் கையில் குழந்தையை வைத்து போராடினேன் என்று கூறுவது இவ்வழக்கில் அனுதாபத்தை ஏற்படுத்துவதற்காகவும் அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காகவும் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது இளஞ்சிறாரான அமுதனுக்கு கையில் காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. நான் சொன்னது போல் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகள் யாரும் எங்களது தரப்பினரை கெட்ட வார்த்தைகளால் திட்டவோ, தாக்கவோ, அசிங்கப்படுத்தவோ, மிரட்டவோ இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் மேற்படி சாட்சியம் அளிக்கவேண்டும் என்று எனது கணவரும் போலீசாரும் கூறினார்கள் அதன்படி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.11.01 19:29:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 17/2025**

Preliminary Register

Deposition of **PW- 4 LW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ப்ரீத்தா | Father Name | : | ரெகுபதி |
| Village | : | அவிச்சாகுடி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | மாணவி (B.A. English ) |
| Religion | : | | Age | : | 20 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 01st day of November 2025.

எதிரிகள் ஆஜர் . எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து கல்லூரியில் மூன்றாம் ஆண்டு B.A. English படித்து வருகிறேன். அ.சா.1 கோமதி எனது அம்மா ஆவார். அ.சா.2 ராஜா எனது மாமா ஆவார். அ.சா.3அனுசியா எனது மாமாவின் மனைவி ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் அவர்களுடன் சேர்த்து அமுதன் பேரிலும் என் அம்மா நடவடிக்கைக்காக புகார் கொடுத்தார். அந்த விபரம் எனக்கு தெரியும். 05.01.2025 அன்று இரவு 08.00 மணியளவில் நான் எனது வீட்டில் என் அம்மா, தங்கை மற்றும் எனது பாட்டி ஆகியோருடன் இருந்தேன். கபிலன் அப்பா மீது நாங்கள் ஏற்கெனவே வழக்கு ஒன்று கொடுத்திருந்தோம், அன்று இரவு என் வீட்டு வாசலுக்கு வந்த ஆஜர் எதிரிகள் குடிபோதையில் தகாத வார்த்தைகளால் எங்களை திட்டினார்கள். அந்த

வார்த்தை என்ன என்றால் (அதை கூற இயலாது அது மிகவும் அசிங்கமான வார்த்தை என்று சாட்சி கூறுகிறார்). அந்த வார்த்தைகளால் எங்களுக்கு மிகவும் அசிங்கமாக இருந்தது. எனது அம்மா கோமதி ஏன் இப்படி பேசுகீறீர்கள் என்று வாசலுக்கு வெளியில் வந்து கேட்டார், அப்போது கபிலன் எனது அம்மாவின் சேலையின் தலைப்பு பகுதியை பிடித்து இழுத்தார். எதிர் வீட்டில் குடியிருக்கும் என் மாமா ராஜாவும் அவரது மனைவி அனுசியாவும் வந்து ஏன் என் அம்மாவை அடித்து தள்ளுகிறீர்கள் என்று எதிரிகளை கேட்டார்கள். கேட்டவுடன் எனது மாமி அனுசியாவை முகிலன் மாமியின் நெஞ்சு பகுதியில் கையை வைத்து அடித்து கீழே தள்ளினார். மாமாவும் இது குறித்து ஏன் வீட்டில் என் மைத்துனர் இல்லாதபோது பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டார், கேட்டவுடன் ஆஜர் எதிரிகளும் அமுதனும் கையால் அடித்து நீ என்ன சப்போட்டுக்கு வரியா உன்னை வீட்டில் வைத்து கொலுத்திவிடுவேன் இன்னும் ஒரு வாரத்தில் கொன்று விடுவேன் என்று மிரட்டினார்கள். இது குறித்து புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் மேற்கூறிய விபரங்களை போலீசார் என்னிடம் வாக்குமூலத்தை காண்பித்து படிக்க சொல்லி அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள படி சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என் தாயார், என் மாமா மற்றும் அனுசியா ஆகியோர் எதிரியின் தாயாரான சரஸ்வதியை திட்டினார்கள் அதனை கேட்கவந்த எதிரிகளை கம்பியாலும் செருப்பாலும் அடித்துவிட்டார்கள் என்றாலும் அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக என் தாயார் கொடுத்த பொய்புகாருக்கு ஆதரவாக அவர்கள் சொல்லிக் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ள, "மாமாவும் இது குறித்து ஏன் வீட்டில் என் மைத்துனர் இல்லாதபோது பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டார், கேட்டவுடன் ஆஜர் எதிரிகளும் அமுதனும் கையால் அடித்து நீ என்ன சப்போட்டுக்கு

வரியா உன்னை வீட்டில் வைத்து கொலுத்திவிடுவேன் இன்னும் ஒரு வாரத்தில் கொன்று விடுவேன் என்று மிரட்டினார்கள்" என்று போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.11.01 19:29:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 17/2025**

Preliminary Register

Deposition of **PW- 5 LW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சந்திரா | Husband Name | : | சாம்பசிவம் |
| Village | : | அவிச்சாகுடி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | 100 நாள் வேலை செய்கிறேன் |
| Religion | : | | Age | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 01st day of November 2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து 100 நாள் வேலைக்கு சென்று வருகிறேன். அ.சா.1 கோமதி எனது மகள் அவர் வீட்டில் தான் இருக்கிறேன். அ.சா.2 ராஜா என் பெரிய மாமானாரின் மகன் எனக்கு மகன் முறை ஆவார். அ.சா.3 அனுசியா அ.சா. 2 ன் மனைவி எனக்கு மருமகள் முறை ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகளை சேர்த்து 3 பேர்கள் மீது புகார் கொடுத்திருந்தோம். இந்த வருடம் ஜனவரி மாதம் 5ம் தேதி இரவு 08.00 மணி இருக்கும் எங்கள் வீட்டில் நானும் எனது பேரப்பிள்ளைகள் மற்றும் எனது மகள் ஆகியோர்கள் இருந்தோம். ஏற்கெனவே எதிரிகளின் அப்பா முருகானந்தத்திற்கும் எனக்கும் வாய்வார்த்தை சண்டை

இருந்தது அதை மனதில் வைத்துகொண்டு குடிபோதையில் அன்றிரவு வாசலுக்கு வந்து கண்ணா பின்னா என்று எதிரிகள் அனைவரும் பேசினார்கள் வயதுக்கு வந்த பிள்ளைகள் வீட்டில் இருந்தனர் அந்த பேச்சினை என்னால் சொல்லமுடியவில்லை. என் மகள் கோமதி வெளியில் வந்து இதுபோல் பேசுகிறீர்களே என்று கேட்டார், ஒருத்தருக்கொருத்தர் சண்டை வந்து கண்ணாபின்னா என்று அடித்துக் கொண்டனர். கபிலா என் மகள் கோமதியின் சேலையை பிடித்து உருவிவிட்டார். இத்தனையும் என்வீட்டு வாசலில் தான் நடந்தது. நாங்கெல்லாம் பார்த்தோம். பக்கத்துவீட்டாரும் பார்த்தனர் ஆனால் அவர்கள் சொல்லமாட்டார்கள். நானும் கேட்டேன் அப்போது என்னையும் அறைந்தார்கள் யார் என்று எனக்கு தெரியவில்லை. இந்த சண்டையில் எதிர்வீட்டில் இருந்த ராஜாவும் இதுகுறித்து எதிரிகளிடம் கேட்டார்கள் ஆம்பளங்க இல்லாத வீட்டில் இப்படி சண்டை போடுறீங்களே என்று கேட்டதற்கு அவர்களையும் திட்டினார்கள். ராஜாவின் மனைவி அனுசியாவின் சேலையையும் கபிலா உருவி நெஞ்சில் அடித்தார் அப்போது அனுசியா குழந்தையுடன் இருந்தார். இது குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

எங்கள் இரு குடும்பத்தாருக்கும் இடையே நீண்ட நாட்களாக முன்விரோதம் இருந்து வருகிறது என்றால் சரிதான். முன்விரோதம் காரணமாக இரு தரப்பினரும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துக் கொண்டுதான் இருப்போம் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ளவாறு சாட்சியம் அளிக்கவேண்டும் என்று என்னிடம் யார் கூறினார்கள் என்றால் நானாகதான் கூறினேன். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள " எதிரிகளின் அப்பா முருகானந்தத்திற்கும் எனக்கும் வாய்வார்த்தை சண்டை இருந்தது அதை மனதில் வைத்துகொண்டு குடிபோதையில் அன்றிரவு வாசலுக்கு வந்து கண்ணா பின்னா என்று எதிரிகள் அனைவரும் பேசினார்கள் வயதுக்கு வந்த பிள்ளைகள் வீட்டில் இருந்தனர் அந்த பேச்சினை என்னால் சொல்லமுடியவில்லை. என் மகள் கோமதி வெளியில் வந்து இதுபோல்

பேசுகிறீர்களே என்று கேட்டார், ஒருத்தருக்கொருத்தர் சண்டை வந்து கண்ணாபின்னா என்று அடித்துக் கொண்டனர். கபிலா என் மகள் கோமதியின் சேலையை பிடித்து உருவிவிட்டார். இத்தனையும் என்வீட்டு வாசலில் தான் நடந்தது. நாங்கெல்லாம் பார்த்தோம். பக்கத்துவீட்டாரும் பார்த்தனர் ஆனால் அவர்கள் சொல்லமாட்டார்கள். நானும் கேட்டேன் அப்போது என்னையும் அறைந்தார்கள் யார் என்று எனக்கு தெரியவில்லை" என்று போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது இளஞ்சிறாரான அமுதனுக்கு ராஜா கம்பியால் அடித்ததில் அவருக்கு வலது கையில் காயம் ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் சொன்னதுபோல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது மகள் அ.சா.1 மற்றும் அ.சா.2 ம் சொல்லிக்கொடுத்து உண்மை சம்பவத்தை மறைத்து அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.11.01 19:29:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 17 /2025**

Preliminary Register

Deposition of **PW- 6 LW - 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரெகுபதி | Father Name | : | பெரியசாமி |
| Village | : | அவிச்சாகுடி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | எலக்டீரிசியன் |
| Religion | : | | Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 01st day of November 2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>**முதல் விசாரணை-**</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து எலக்டீரிசியனாக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு வழக்கின் இருதரப்பினரையும் தெரியும் எனது ஊர்காரர்கள். சம்பவம் நான் கேள்விபட்ட வகையில் தான் தெரியும் எனது மனைவிதான் என்னிடம் கூறினார். எனக்கு நேரடியாக தெரியாது. 07.01.2025 அன்று காலை 11.00 மணிக்கு எங்கள் ஊருக்கு போலீசார் விசாரணைக்காக வந்தார்கள். ஏற்கனவே முருகானந்தத்திற்கும் சந்திராவிற்கும் பிரச்சனை ஒன்று இருந்தது. உதவி ஆய்வாளர் சம்பவயிடத்தில் திசைகளையும் வீடுகள் குறித்த குறிப்புகளையும் குறித்துக்கொண்டார். இந்த

விசாரணையில் சம்பவத்தை பற்றியும் கேட்டார்கள். அவர்கள் விசாரித்ததற்காக என்னிடமும் தம்பி விஜயகுமாரிடமும் சாட்சி கையொப்பம் பெற்றார்கள். நீதிமனறத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். (பார்வை மகசர் **அ.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது) போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் அவிச்சாகுடி கீழத்தெரு என்றால் சரிதான். கீழத்தெருவிலிருந்து குடியானத் தெரு வடக்கு தெற்காக பிரிகிறது என்று சொன்னால் சரியல்ல. கிழக்கு மேற்காக என் வீட்டுக்கு மேற்கு பக்கம் உள்ளது. வரைபடத்தில் குடியானத் தெரு எங்கு உள்ளது என்றால் வரைபடத்தில் குடியானத் தெருஇல்லை. கீழத் தெருவில் எத்தனை வீடுகள் இருக்கும் என்றால் சுமார் 16, 17 வீடுகள் இருக்கும். கீழத் தெருவில் உள்ள வீடுகள் அனைத்தும் அருகருகே தான் உள்ளன என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது எத்தனை பக்கங்கள் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் அதில் ஒரு பேப்பரில் எழுதியிருந்தது ஒரு பேப்பரில் வரைபடம் வரைந்திருந்தது. நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன தலைப்பில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்துதான் போட்டேன் என்றால் சரியல்ல எனது வீட்டு வாசலில் வைத்துதான் போட்டேன். நான் கையொப்பத்தை காவல் நிலையத்தில்தான் போட்டேன் என்றாலும் வழக்கிற்காக சம்பவயிடத்தில் வைத்துதான் போட்டேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் மீதுள்ள முன்விரோதம் காரணமாக எனது மனைவி மூலமாக கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.11.01 19:29:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 17/2025**

Preliminary Register

Deposition of **PW- 7 LW-7**

| Name | : | விஜயகுமார் | Father Name | : | சிவசங்கர் |
|---|---|---|---|---|---|
| Village | : | சாலபோகம் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | டைல்ஸ் வேலை |
| Religion | : | | Age | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 01st day of November 2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>முதல் விசாரணை-</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து டைல்ஸ் ஒட்டும் வேலை செய்து வருகிறேன். எனக்கு அ.சா.1, அ.சா.2, அ.சா.3 எனது உறவினர்கள். ஆஜர் எதிரிகள் அவர்கள் குடியிருக்கும் தெருவை சேர்ந்தவர்கள். 07.01.2025 அன்று காலை 11.00 மணிக்கு சம்பவயிடம் வந்த போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு தொலைவு குறித்த விபரங்களை கேட்டார்கள் படம் வரைந்தார்கள் நானும் ரெகுபதி அண்ணாவும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். (பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது) போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

எனது ஊருக்கும் அசா.1 கோமதியின் ஊருக்கும் இடையே சுமார் 1 1/2 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். அ.சா.1 எனது அண்ணி என்பதால் போலீசார் சம்பவயிடம் வந்ததாகவும் வரைபடம் தயார் செய்ததாகவும் நான் அதில் சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாகவும் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.11.01 19:30:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 17/2025**

Preliminary Register

Deposition of **PW- 8(புலன் விசாரணை அதிகாரி)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுப்ரமணியன் | Father Name | : | அண்ணதுரை |
| Village | : | | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | உதவி ஆய்வாளர்-<br>வலங்கைமான் |
| Religion | : | | Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 01st day of November 2025.

எதிரிகள் ஆஜர் . எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>முதல் விசாரணை-</u>**

நான் தற்போது வலங்கைமான் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.01.2025 அன்று வலங்கைமான் காவல் நிலையத்தில் பணிப்பொறுப்பில் இருந்தபோது கோமதி என்பவர் நிலையம் ஆஜராகி புகார் ஒன்றை கொடுத்தார் அந்த புகார் மனுவை பெற்ற நான் 07.01.2025 அன்று கபிலன், முகிலன், அமுதன் என்பவர்கள் மீது விசாரணைக்கு பின்பு நிலைய குற்ற எண் 09/2025 ச/பி 296(b), 115(2), 351(3) BNS ன் கீழும் ச/பி. 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும் வழக்கு பதிவு செய்தேன். (மேற்படி முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது) பின்பு இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துகொண்டு நான் இந்த வழக்கில் குற்றமுறு

தாக்குதலுக்கு உள்ளான யாரும் மருத்துவமனையில் சிகிச்சை பெறவில்லை என்பதும் தெரியவந்தது, சம்பவயிடத்திற்கு 07.01.2025 அன்று பகல் 11.00 மணிக்கு சென்றேன். அவ்விடத்தினை சாட்சிகள் ரெகுபதி மற்றும் விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். சாட்சிகளிடம் அதில் கையொப்பம் பெற்றேன். ( வரைபடம் **அ.சா.ஆ.5 ஆகவும்** மற்றும் பார்வை மகசர் **அ.சா.ஆ.6 ஆகவும்** குறியீடு செய்யப்படுகிறது.) பட்டியல் சாட்சி 1 லிருந்து 7 வரை தனித்தனியே விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். சட்டப்பிரிவினை மாற்றம் செய்து அதற்கான அறிக்கையை **அ.சா.ஆ.7 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. எனது புலன் விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவந்தது. எதிரிகளை தேடிய நிலையில் எதிரிகளில் அமுதன் என்பவர் இளஞ்சிறார் என்றதும் தெரிய வந்தது. எதிரி கபிலன் மற்றும் முகிலனை குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தினேன். இளம் சிறார் நீதிக்குழுமத்தில் தானே சென்று ஆஜரானார்எ ன்று தெரிய வந்தது. இத்துடன் எனது விசாரணையில் கபிலன் மற்றும் முகிலன் இருவரின் செய்கையானது ச/பி 296(b), 351(3), 131 BNS ன் கீழும் பிரிவு 4 TNPHW Act ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்ற இறுதிஅறிக்கையினை தாக்கல் செய்தேன். இளம்சிறாரை பொறுத்து நீதிக்குழுமத்தில் தனியாக குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

எதிரிகளின் தாயார் சரஸ்வதி கடந்த 05.01.2025 அன்று இரவு 08.00 மணிக்கு இவ்வழக்கின் அ.சா.1 கோமதி, அ.சா.2 ராஜா, அ.சா.3 அனுசியா ஆகியோர் கோவிலுக்கு சென்ற தன்னை கெட்ட வார்த்தைகளால் திட்டியதாகவும் அதை கேட்கவந்த தனது மகன்களான இவ்வழக்கின் எதிரிகள் மற்றும் அமுதன் ஆகியோரை ராஜா கம்பியாலும் அனுசியா செருப்பாலும் அடித்து காயப்படுத்தி கம்பியை காட்டி கொலைமிரட்டல் விடுத்ததாக என்னிடம் சரஸ்வதி புகார் கொடுத்து அந்த புகாரின் பேரில் குற்ற எண் 10/2025 ச/பி 296(b), 118(1), 133, 351(3) BNS ன் படி எதிரிகள் கோமதி, ராஜா, அனுசியா ஆகியோர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால்

சரிதான். இவ்வழக்கும் மேற்படி குற்ற எண் 10/2025 வழக்கும் எதிர் வழக்குகள் என்றால் சரிதான். மேற்படி குற்ற எண் 10/2025 வழக்கின் புகாரிலும் வாக்குமூலத்திலும் கம்பியாலும் செருப்பாலும் அடித்து காயப்படுத்தியதாக அவ்வழக்கின் புகார்தாரர் சரஸ்வதி கூறியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி குற்ற எண் 10/2025 வழக்கில் இவ்வழக்கின் எதிரிகளான முகிலன் மற்றும் இளஞ்சிறாரான அமுதன் ஆகியோர் சாட்சிகளாக சேர்க்கபட்டுள்ளனர் என்றால் சரிதான். மேற்படி குற்ற எண் 10/2025 வழக்கில் இவ்வழக்கின் எதிரிகளான முகிலன் மற்றும் இளஞ்சிறாரான அமுதன் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களிடம் வாக்குமூலம் ஏதும் பதிவு செய்து இந்நீதிமன்றத்தில் முன்னிலை படுத்தவில்லை என்றால் அமுதனிடம் மட்டும் வாக்குமூலம் பதிவு செய்தேன், ஆனால் அதனை நீதிமன்றத்தில் தவறுதலாக தாக்கல் செய்யவில்லை. மேற்படி குற்ற எண் 10/2025 வழக்கில் சாட்சிகள் சரஸ்வதி, முகிலன், அமுதன் ஆகியோர் தனக்கு காயம் ஏற்படவில்லை என்றோ மருத்துவ சிகிச்சை பெறவில்லை என்றோ கூறவில்லை என்றால் சரிதான். இவ்விரண்டு வழக்குகளையும் ஒன்றாக விசாரணை செய்து ஒரே நாளில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேனா என்றால் ஒன்றாக விசாரணை செய்தேன் ஆனால் குற்ற இறுதி அறிக்கை வெவ்வேறு நாளில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி குற்ற எண் 10/2025 வழக்கில் 10.02.2025 அன்று குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளதாக உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கான குற்ற எண் 09/2025 ல் வழக்கில் 03.04.2025 அன்று குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளதாக உள்ளது என்றால் சரிதான். இவ்விரு வழக்குகளிலும் வெவ்வேறு பார்வை மகசர் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். குற்ற எண் 09/2025 ல் வழக்கில் சம்பவயிடம் சென்று விசாரணை செய்தது 07.01.2025 காலை 11.00 மணி என்று பார்வை மகசர் சாட்சிகளின் வாக்குமூலத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். குற்ற எண் 10/2025 ல் வழக்கில் சம்பவயிடம் சென்று விசாரணை செய்தது 07.02.2025 மதியம் 12.00 மணி என்று பார்வை மகசர் சாட்சிகளின் வாக்குமூலத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். நான் எதிர் வழக்குகளில் கடைபிடிக்க வேண்டிய கட்டாய நெறிமுறைகளை

கடைபிடிக்காமல் துரிதநிலையில் வழக்குகளை ஒன்றாக விசாரணை செய்யாமல் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குற்ற எண் 10/2025 ல் வழக்கில் இளஞ்சிறார் அமுதனுக்கு ஏற்பட்ட காயம் குறித்து வலங்கைமான் அரசு மருத்துவமனை மருத்துவரை விசாரணை செய்து வாக்குமூலமோ அவரிடமிருந்து புறநோயாளிக்கான சீட்டோ பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் காயம் பட்ட நபர் புறநோயாளியாக சிகிச்சை பெற்று சென்றுவிட்டபடியால் மருத்துவரிடம் எவ்வித வாக்குமூலமும் பெறவில்லை. நான் அமுதனிடம் எவ்வித வாக்குமூலமும் பெறவில்லை அவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து அவரிடம் விசாரணை செய்யாமல் நானாக பிரிவு மாற்ற அறிக்கையினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் புகாரில் புகாரினை எந்த தேதியில் கொடுத்தார் என்றோ எத்தனை மணிக்கு கொடுத்தார் என்றோ எவ்வித குறிப்பும் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கையினை 07.01.2025 அன்று காலை 09.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று கண்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் பிரிவு மாற்ற அறிக்கை 06.01.2025 அன்றே தயார் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான் தட்டச்சு பிழை காரணமாக தவறுதலாக உள்ளது. இவ்வழக்கில் வெளிநபர்களையோ ஊர்காரர்களையோ விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். அவர்கள் யாரும் சாட்சிகளாக முன்வராத காரணத்தினால் அவர்களிடம் வாக்குமூலம் பெறவில்லை. எனது விசாரணை அறிக்கையில் வெளிநபர்கள் யாரும் சாட்சிகளாக முன்வரவில்லை என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் குற்ற முறையீட்டாளரால் காலதாமதம் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் எனது இறுதி அறிக்கையில் கால தாமதத்திற்கான காரணம் குறித்து விசாரணை செய்து குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான். நான் சொன்ன நாள் நேரத்தில புகார் ஏதும் பெறப்படவில்லை என்றாலும் வழக்கு ஏதும பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் என்னால் தயார் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும இவ்வழக்கிற்காக பொய்யாக என்னால் தயார்

செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சாட்சிகள் யாரையும் சரிவர விசாரணை செய்யாமல் எதிர் வழக்குக்களில் பின்பற்றபடவேண்டிய நெறிமுறைகளை பின்பற்றாமல் எதிரிகள் மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் எதிரிகள்தான் உண்மையான பாதிக்கப்பட்டவர்கள் அதனை குறிப்பிடதவறிவிட்டேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.11.01 19:30:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.